# வள்ளுவத்தில் குடும்ப உறவுச் சித்தரிப்பு

3

செ.முத்துசுவேதா
முதுகலை தமிழ் இரண்டாம் ஆண்டு
தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சி கல்லூரி
திருச்சிராப்பள்ளி-2
Swethaselvam176@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

ஆணும், பெண்ணும் சுடரும் கதிரும் போல் , மலரும் மணமும் போல் இருவர் வாழ்வும் ஒன்றுபட்டு , ஒருவரை ஒருவர் நன்கறிந்து , நயம்பட அன்பாய் வாழ்வு நடத்துவதுதான் இல்லறம். காதல் இருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டு வாழ்வதுதான் இல்வாழ்க்கை.இல்வாழ்க்கை அமைப்பினை வள்ளுவர் தனது குறளின் மூலம் வெளிக்கொண்டு வந்திருக்கிறார்.குடும்ப அமைப்பு ,குடும்ப உறவு பற்றிய கருத்தினை இந்த ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

**கலைச்சொற்கள்**

| | | |
|---|---|---|
| கூடு | - | குடம்பை |
| மங்கலம் | - | நற்பயன் |
| மகவு | - | குழந்தை |
| குழைவு | - | குழந்தை |
| இல் | - | குடி |
| குடி | - | குடும்பம் |

**முன்னுரை**

அறத்துப்பால் தனிமனித வாழ்வினையும்,பொருட்பால் சமுதாய வாழ்வினையும், காமத்துப்பால் அகவாழ்வினையும் சுட்டிக்காட்டுகிறது . மனிதன் ஒரு சமுதாய விலங்கு என்பது உலகறிந்த உண்மை.தனியாக வாழ்ந்து இன்பத்தைப் பெற்றேன் என யாரும் கூறுவதில்லை.மனிதன் தனியாக இருப்பதை விட உறவுகளோடு சேர்ந்திருப்பதையே விரும்புகின்றான். நம்முடைய வரலாற்று இலக்கியங்களும் இக்கருத்தையே உறுதி

செய்கின்றன.திருக்குறள் -அறத்துப்பாலில் அதிகாரம் ஐந்து இல்வாழ்க்கையில் இருந்து அதிகாரம் இருபத்து நான்கு மக்கட்பேறு வரையிலுள்ள அதிகாரங்களில் குடும்ப உறவு பெரிதும் சித்தரிக்கப்பட்டுள்ளது.சமுதாய மதிப்பு பெறுவதற்குக் குடும்ப உறவு இன்றியமைந்ததாக உள்ளது.இக்கட்டுரை குடும்ப உறவுச் சித்தரிப்பு என்ற நோக்கில் அமைகிறது.

**உறவுகள்**

சமுதாயத்தில் காணப்படும் உறவுகளை உற்பத்தி உறவுகள்,உடமை உறவுகள் என இருவகைகளாகப் பிரிக்கலாம்.உற்பத்தி உறவு என்பது உழைப்பினை அடிப்படையாகக் கொண்டு அமையக்கூடியதாகும்.உடமை உறவென்பது சொத்துரிமை மையமாக வைத்து அமையக்கூடியதாகும்.உடமை உறவென்பது குடும்ப இரத்த உறவையே குறிக்கும்.குடும்ப உறவுகளை மானுடவியலார் இரத்த உறவு,மண உறவு ,புனைவியல் உறவு எனப்பிரிப்பர்.

**குடும்பம்-வரையறை**

குடும்பம் என்பது திருமணத்தால் பிணைக்கப்பெறும் மனித குழுவாகும்.இம்மனிதர்கள் ஒரே வீட்டில் வாழும் உறவு தொடர்புடை யவர்கள்.பறவைகள் கூடுகட்டி வாழும் மனிதர்கள் வீடு கட்டி வாழ்வார்கள். “கூடு”என்னும் சொல் ‘குடம்பை’என்று பொருள் தரும்.இச்சொல்லில் இருந்தே குடும்பம் என்ற சொல் தோன்றியது.திருமணத்தின் வாயிலாக ஆணும் பெண்ணும் கூடி வாழ்வதையே குடும்பம் என்று அழைப்பர்.வள்ளுவர் குடும்பம் என்ற சொல்லை ஒரு குறளில் மட்டும் ஆள்கிறார்.

**“ இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக்**

**குற்ற மறைப்பான் உடம்பு”**

**குடி**

குடும்பத்திற்கு வள்ளுவர் வழங்கும் மற்றொரு பெயர் குடி.25 குறட்பாக்களில் வள்ளுவர் குடி என்னும் சொல்லை ஆள்கிறார்.அகம்,இல்லம்,மனை,வீடு,குடும்பம், குடிஆகிய இச்சொற்கள் அனைத்தும் நடைமுறை வாழ்க்கையில் கணவன் மனைவி இருவரும் சேர்ந்து வாழும் குடும்பத்தை மட்டுமே குறிக்கும்.குடியும் குடும்பமும் ஒன்றா என்ற கேள்வி எழலாம்.வள்ளுவர் தாமே குடும்பம் என்னும் சொல்லை ஒரு குறளில் குடிக்குப் பதிலாக மேலே குறிப்பிட்டுள்ள குறளை பயன்படுத்துகிறார்.”இல்”என்னும் சொல்லும் இதே

பொருளில் ஆளப்படுகிறது.

**"நல்லாண்மை என்பது ஒருவற்குத் தான்பிறந்த**

**இல்லாண்மை ஆக்கிக் கொளல்"**

கணவன் மனைவி தங்களது தேவைகளை நிறைவு செய்து கொள்வதுடன்,சமுதாயக் கடமைகளையும் செவ்வனே ஆற்றுவதால் துறவறத்தைக் காட்டிலும் இல்லறம் மேலானது என தெரியவருகிறது.துறவறக் கருத்துக்களை 130 குறட்பாக்களிலும்,இல்லறக் கருத்துகளை 1200 குறட்பாக்களிலும் சொல்வதன் வாயிலாக இல்லறத்திற்கே வள்ளுவர் முதன்மைத் தந்திருப்பது தெரிகிறது என்பார் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை.

அற ஒழுக்கம்

தனிமனித பண்பாடு மறைமுகமாக சமுதாயக் கட்டுப்பாட்டிற்கும் ஒழுக்க நிலைகளுக்கும் வழிவகுக்கும். சமுதாய வாழ்க்கையில் அடிப்படை குடும்பமே. அவற்றுள் அறம் தலையானது பலவித விதிகளுக்கு உட்பட்டு கட்டுபாட்டிற்குள் வாழும் குடும்பமே பன்பட்ட குடும்பமாகச் சமுதாயத்தில் மதிக்கப்படுகிறது.அன்பு நெறியும், பொது நோக்கப்பான்மையும் பயில்வதற்குரிய பெரும் பள்ளியாக திகழ்வது இல்லறம்.மக்கள் நல்ல முறையில் இல்வாழ்கை நடத்துவதே அறமாகக் கருதி வள்ளுவர் உரைக்கிறார். இல்லற வாழ்வில் அறநெறியுடன் இருப்பதே சிறப்பு தரும் என்றும் குறிப்பிடுகிறார்.இதனை,

**" ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை**

**நோற்பாரின் நோன்மை உடைத்து"**

என்றகுறள் விளக்குகிறது.மனைவி மக்கள் நண்பர் விருந்தினர் ஆகியோரோடு பழகி ஒற்றுமையோடு வாழ வழிவகுப்பது இல்லறமாகும்.

இல்வாழ்க்கைக்கு அணிகலன்

இல்வாழ்க்கையில் அணிகலன் வாழ்க்கைத் துணைக்கு மிகுதியான பொன்னாலும்,மணியாலும் நகை களைப் பூட்டிச் செல்வத்துள் மூழ்க வைப்பது அணிகலன் ஆகாது.இல்வாழ்க்கையில் உண்மையான அணிகலன் நல்ல குழந்தைகளை பெற்றெடுப்பது தான்.குழந்தைகள் என்றால் ஆண் குழந்தைகளை மட்டும் குறிக்கும் என்பது தவறு.பெண் குழந்தைகளையும் சேர்த்தே குறிக்கும் என்பதே நன்மக்கட்பேறு

**“மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன்**

**நன்கலம் நன்மக்கட் பேறு”**

என்று வள்ளுவர் கூறுகின்றார்.

மக்கட்செல்வம் - குழந்தை

மழலை தரும் இன்பம் மகத்தானது அது சொல்லில் அடங்காது. அதனால் தான் “கடந்த ஞானியரும் கடம்பரோ மக்கள் மேல் காதல் “ என்றுரைப்பர்.அனைத்துலக பாவலர்களும் அகம் குழைந்து பாடப்படும் பாடலுக்கு பாடுபொருளாவது குழந்தையே ஆகும்.

**தாயின் சிறப்பு**

மனித உலகத்தின் தளர்ச்சியும் தளர்ச்சியும் தாயால் மட்டுமே உருவாகின்றது.இத்தகைய தாய்மைக்கு அர்பணிப்புக்கு இவ்வுலகில் நிகர் வேறில்லை.தாயனவள் கருவாகக் தாங்கி உருகொடுத்து உயிரை விடுத்தாவது உயிர்க் கொடுக்கின்றாள். அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்று முன்னிறுத்தி உள்ளனர்.

**தந்தையின் கடமை**

கணவன் மனைவியிடையே காதலை வளர்ப்பதற்கும் கருத்தினை பிணிப்பதற்கும் குழந்தை வேண்டப்படுவதாகும் .மக்களை பெற்றுவிட்டால் மட்டும் போதாது அவர்களை நல்லமுறையிலே வளர்த்து அறிவு புகட்டுவதும் பெற்றோர் கடமையாகும். அதிலும் முக்கியமாய் ஆண் மகனுக்குக் கல்வியைக் கற்றச் செய்து அவையிலே முதலிடம் பெறும்படியாக செய்ய வேண்டுவது தந்தையின் கடமையாகும் என்பதை,

“தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து

முந்தி இருப்பச் செயல்”

என்ற குறள் மூலம் விளக்குகிறார்.சங்க புலவர் பொன் முடியார் ஒவ்வொருவரது சமுதாயக் கடமைகளை குறிப்பிடும் போது,

ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே;

சான்றோர் ஆக்குதல் தந்தைக்கு கடனே;1

என்ற பாடலில் முதல் இரு வரியில் தாய் தந்தையர் கடமைகளைச் சங்கப்புலவர்

பொன்முடியார் சுட்டுகிறார் .

**தொல்காப்பியத்தில் குழந்தை**

தொல்காப்பியர் குழந்தையை மகள்,மகன்,குழைவு ,மகவு,கயந்தலை என்ற சொல்லாட்சி முறைகளைத் தொல்காப்பியத்தில் குறிப்பிட்டுள்ளார்.கணவன் மனைவி இருவருக்கும் இடைப்பட்ட அன்பு பரவலாக விரிவது அவர்கள் குழந்தையைப் பெறும்பொழுதுதான் இருவரின் அன்பின் பயனாகவே குழந்தைகள் உருவாகின்றனர்.இத்தகையத் தகுதிகளைக் கொண்ட மழலைச் செல்வத்தை வள்ளுவர் மக்கட்பேறு என்ற அதிகாரத்தில் பலவாறு புகழ்ந்துரைக்கிறார்.

“மக்கள் தீண்டல் உடற்கின்பம் மற்றுஅவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு “

எனவும்,

“குழல் இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச் கேளா தவர்”

மகன் செய்யும் உதவி

பெற்றோரால் வளர்க்கப்படும் மக்கள் எதிர்காலத்தில் பிறருக்குத் தொண்டு செய்யும் வாழ்க்கையை மேற்கொள்வதை, இவன் தந்தை இவனைப் பெறுவதற்கு என்ன தவம் செய்தானோ என மற்றவர்கள் வியக்கும் வண்ணம் சான்றோராய் விளங்குதல் மக்கள் பெற்றோருக்குச் செய்யும் உண்மையான நன்றியாகும். ”நஞ்சுண்டவன் சாவான்”என்பது பழமொழி. இதனால் நஞ்சுண்ட ஆடவர் இறப்பார்

**நிறைவுரை**

ஓர் ஆணும், பெண்ணும் திருமணத்தின் வாயிலாக இணைந்து சமுதாய ஒப்புதலோடு அமைக்கப்பட்ட சிறு சமுதாயம் குடும்பம் ஆகும்.பாசம் ,கூடி வாழும் இயல்பு இவ்விரண்டு பண்புகளையும் குடும்பம் ஏற்படுத்துகிறது

இதற்கு அடிப்படையாக அமைவது இரத்த உறவே ஆகும்.ஒற்றுமை ,பாசம் போன்ற உணர்வுகள் குடும்பம் தோற்றுவிப்பதால் இது சமுதாத்தின் இன்றியமையாத உறுப்பாக அமைகிறது.

**துணைநூற்பட்டியல்**


1. திருக்குறள் -பரிமேலழகர் உரை
2. திருக்குறள் ஒரு சமூக பார்வை – தி.வெ.ரா
3. திருக்குறள் நயம்- குறளாய்வுச் செம்மல் ஆ.வே இராமசாமி
4. திருக்குறள் வழங்கும் பத்து உடைமைகள்-புலவர் வ.ஞானபிரகாசம்
5. திருக்குறள் நயவுரை-“திருக்குறள்நம்பி” தங்க.பழமலை.